# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

# TENKASI.

**Date : 02.12.2025**

**OS No. : 212/2021**
**Pw : 1**

**Name : திரு. ராமச்சந்திரன்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் பில்டிங் கான்ட்ராக்ட் வேலை செய்கிறேன். தனிப்பட்ட நபர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் வீடுகள் கட்டிக்கொடுக்கும் வேலை செய்கிறேன். சுமார் 25 வருடங்களாக இந்த தொழில் செய்கிறேன். 2017 - 2018 வரை நான் வருமான வரி கணக்கு தாக்கல் செய்துள்ளேன். அதன் பிறகு தாக்கல் செய்யவில்லை. ஆனால் அதற்குரிய கணக்குகளை நான் பராமரித்துவருகிறேன். பில்டிங் கான்ட்ராக்ட் தவிர வட்டிக்கு கொடுத்து வாங்கும் தொழிலும் செய்துவருகிறேன். கடந்த 10 வருடங்களாக பணம் கொடுக்கல் வாங்கல் தொழில் செய்துவருகிறேன். நான் கொடுக்கும் பணத்திற்கு பெறப்படும் வட்டி தொடர்பாக கணக்குகளை பராமரித்துவருகிறேன். இந்த கணக்குகளை பொறுத்து நான் வருமான வரியில் அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2017 – 2018 வருமான வரி கணக்கு அறிக்கையை பார்த்தால் அந்த கணக்கு ஆண்டில் எனது கைவசம் இருந்த தொகை எவ்வளவு, பரிமாற்றம் செய்யப்பட்ட தொகை எவ்வளவு என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். மேற்படி கணக்கு அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது. தற்போதும் வட்டிக்கு விடும் தொழில் செய்கிறேனா என்றால் நண்பர்கள் மத்தியில் செய்துவருகிறேன். இன்றுவரை பில்டிங் கான்ட்ராக்ட் தொழிலும் செய்துவருகிறேன். அந்த கணக்குகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதிலும் எனக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது.

2) எனக்கு வருமானம் வரக்கூடிய சொத்துக்கள் இருக்கிறதா என்றால் இரண்டு பில்டிங் காம்ப்ளக்ஸ் உள்ளது, அதில் மொத்தம் 10 கடைகள் உள்ளன. ஒரு காம்ப்ளக்ஸ் 1994 ம் வருடம் வாங்கினேன், அதில் ஒரு பெரிய ஹாலும், 2 வீடுகளும் உள்ளன. அதன் அருகே மற்றொரு காம்ப்ளக்சை 1999 - 2000 ம் வருடத்தில் வாங்கினேன். அதன் வாடகை வருவாய் விவரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது.

3) அசல் வழக்கு எண். 162/2021 வழக்கின் பிரதிவாதியின் சகோதரர் தான் அசல் வழக்கு எண். 212/2021 வழக்கில் பிரதிவாதியாக காட்டப்பட்டுள்ளார் என்றால் சரிதான். இருவரும் ஒன்றாக சேர்ந்துதான் தொழில் செய்துவந்தார்கள். அவர்கள் பான் மசாலா தொழில் மற்றும் கோக்கோ வியாபாரம் செய்வதாக என்னிடம் சொல்லியிருந்தார்கள். அவர்கள் தனித்தனியே தொழில் நடத்தினார்களா என்றால் இருவரும் ஒன்றாக சேர்ந்து தொழில் செய்வதாகத்தான் என்னிடம் சொன்னார்கள். மேற்படி இரண்டு வழக்குகளின் பிரதிவாதிகளும் 03.03.2019 ம் தேதி என்னிடம் நேரில் வந்து பணம் தேவை என்று 30 லட்ச ரூபாய் கேட்டார்கள். ஆனால் அப்போது என்னிடம் 15 லட்சம் தான் இருந்தது. 03.03.2019 ம் தேதி இருவரிடமும் 15 லட்சம் பணம் கொடுத்தேன். அதன் பிறகு 02.04.2019 அன்று சிவக்குமார் மட்டும் வந்து ரூபாய் 15 லட்சம் ரொக்கமாக பெற்றுக்கொண்டார். மேற்படி தொகைகளை ரொக்கமாகத்தான் கொடுத்தேன். மேற்படி தொகையை எங்கிருந்து எடுத்துக்கொடுத்தேன் என்றால் டி.எம்.பி வங்கி, வெங்கடாம்பட்டி கிளையில் சிறிது தொகை இருந்தது, மீதி பணம் எனது மகள்கள் என்னிடம் கொடுத்து வைத்திருந்தார்கள். என்றைய தினம் வங்கியிலிருந்து பணம் எடுத்தேன் என்றால் தேதி எனக்கு நியாபகமில்லை, ஆனால் வங்கியிலிருந்து மொத்தமாக பணம் எடுத்து கடனாக கொடுக்கவில்லை. என் கைவசம் இருந்த பணத்தையும் அதனுடன் சேர்த்து கொடுத்தேன். என் கைவசம் இருந்த தொகை எவ்வளவு என்ற விவரம் என்னுடைய கணக்கு அறிக்கையில் துலங்கும் என்றால் சரிதான். அதனையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது.

4) எனக்கு ஆடிட்டர் கிடையாது. இன்றைய தினம் வரை நான் வருமான வரி செலுத்தவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் பிரதிவாதி சிவக்குமார் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நான் படித்துப்பார்த்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள

நிரூபண வாக்குமூலத்தில் எதிர் வழக்குரை சங்கதிகளை மறுதலித்து கூறவில்லை என்றால் அதுபற்றி எனது வழக்கறிஞருக்குத்தான் தெரியும். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை என்பதால்தான் நான் அதனை எனது நிரூபண வாக்குமூலத்தில் மறுத்து குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. இரு வழக்குகளின் பிரதிவாதிகளும் என்ன வியாபார பெயரில், முகவரியில் தொழில் செய்துவந்தார்கள் என்பது எனக்கு தெரியாது. மேற்படி பிரதிவாதிகளின் நிதி நிலைமை தெரிந்துகொண்டுதான் நான் பணம் கொடுத்தேன். கடந்த 2015 ம் ஆண்டிலிருந்தே எனக்கு பிரதிவாதிகளை அவர்களது மாமனார் மூலமாக தெரியும்.

5) பிரதிவாதிகள் 2009 - 2014 வரை ஆச்சி மசாலா நிறுவனத்தின் ஸ்டாக்கிஸ்ட்டாக செயல்பட்டு வந்தார்கள் என்றால் சரிதான். அதே காலக்கட்டத்தில் பெப்சி கம்பெனியின் ஸ்டாக்கிஸ்ட்டாகவும் செயல்பட்டு வந்தார்கள் என்றால் சரிதான். 2011 முதல் 2014 வரை பிரதிவாதிகளின் தொழில் படிப்படியாக நலிவுற்று வந்தது என்றும் அதனால் என்னிடம் பணம் கேட்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது- அவர்கள் செய்துவந்த தொழில் 2014 ல் முடங்கியது என்றும், ராஜன் பல்வேறு கடைகளில் வணிகவரி கணக்கு எழுதும் வேலை செய்துவந்தார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது- பிரதிவாதி சிவக்குமார் தன்னுடைய வீட்டில் 2014 ம் ஆண்டிலிருந்து ஊறுகாய் தயாரிக்கும் குடிசை தொழில் செய்துவந்தார் என்றால் அந்த தொழிலும் செய்துவந்தார். சிவக்குமார் தான் செய்துவந்த குடிசைத்தொழிலுக்காக 2011 ம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் என்னிடம் 5 லட்ச ரூபாய் வட்டிக்கு பணம் கேட்டார் என்றும், அதற்கு சிவக்குமாரின் சகோதரர் ராஜன் என்பவரும் தனியாக ஒரு ஆதரவு எழுதிக்கொடுக்கவேண்டும் என நான் கேட்டேன் என்றும், 5 லட்சரூபாய்க்கு நாள்தோறும் 1500 ரூபாய் வட்டியாக செலுத்தவேண்டும் என்ற நிபந்தனை விதித்தேன் என்றும், அதற்கு சிவக்குமார் சம்மதித்தார் என்றும், அதன் அடிப்படையில் நான் சிவக்குமாரிடம் எழுதப்படாத முத்திரை ஒட்டிய கடனுறுதி சீட்டில் கையொப்பம் பெற்றுக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல.

6) என்னிடம் வாங்கிய பணத்திற்கு சிவக்குமார் ஒப்புக்கொண்ட வட்டியை 2012 ம் ஆண்டு மார்ச் மாதம் வரை தவறாமல் செலுத்திவந்தார் என்றால் சரியல்ல. 2012 மார்ச் மாதம் மேலும் 5 லட்ச ரூபாய் தனக்கு தேவை என சிவக்குமார் என்னிடம் கடன் கேட்டார் என்றும், நான் ஏற்கெனவே விதித்துள்ள அதே நிபந்தனைகளின் பேரில் மேலும் 5 லட்சம் கடன்

கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. அதற்காகத்தான் மீண்டும் சிவக்குமாரிடமும், ராஜனிடமும் எழுதப்படாத முத்திரை ஒட்டிய கடனுறுதி சீட்டில் கையொப்பம் பெற்றுக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல.

7) வா.சா.ஆ. 1 கடனுறுதி சீட்டின் அடிப்படையில் இவ்வழக்கின் பிரதிவாதி ராஜன் என்னிடம் எந்த தொகையும் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. ராஜனின் சகோதரரர் சிவக்குமாரால் ஒருக்கட்டத்தில் எனக்கு சரியாக வட்டி செலுத்தாத காரணத்தினால் என் வசம் இருந்த நிரப்பப்படாத கடனுறுதி சீட்டுக்களை நிரப்பி ராஜன் மற்றும் சிவக்குமார் ஆகியோர் மீது 2 வழக்குகளை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன காலக்கட்டத்தில், சிவக்குமார் மற்றும் ராஜன் ஆகியோருக்கு தலா 15 லட்ச ரூபாய் கடனாக கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதி, வாய்ப்பு கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள கடனுறுதி சீட்டில் வாஞ்சிநாதன் என்பவரும், பரமசிவன் என்பவரும் சாட்சிகளாக கையொப்பமிட்டுள்ளார்கள். வாஞ்சிநாதனின் அப்பா பெயர் அருணாசலமாகும். சாட்சி பரமசிவத்தின் அப்பா பெயர் எனக்கு தெரியாது- 2 வழக்குகளிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள கடனுறுதி சீட்டுக்களிலும் மேற்சொன்ன அதே சாட்சிகள்தான் கையொப்பமிட்டுள்ளார்கள் என்றால் சரிதான்.

8) 2011, 2012 ம் ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட கடனுறுதி சீட்டுக்கள் என்பதால்தான் அவற்றில் நான் தட்டச்சு செய்து விவரங்களை நிரப்பி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி விவரங்களை தட்டச்சு செய்த நபர் யாரென்றால் பிரதிவாதிகள்தான் அதை தட்டச்சு செய்து கொண்டுவந்தார்கள், அதனால் தட்டச்சு செய்த நபர் யாரென்று எனக்கு தெரியாது. அவர் மேற்படி கடனுறுதி சீட்டுக்களில் கையொப்பமிட்டுள்ளரா என்ற விவரமும் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள கடனுறுதி சீட்டுக்கள் எழுதப்பட்டதாக கூறப்படும் காலத்தில் அனைத்து தட்டச்சுக்களும் கணிணி மயமாக்கப்பட்டுவிட்டன என்றும், நான் பிரதிவாதியிடமும், அவரது சகோதரரிடமும் அவர்களது கைரேகை மற்றும் கையொப்பங்களை மட்டும் வாங்கி வைத்திருந்த கடனுறுதி சீட்டு படிவங்களில் மோசடியாக தட்டச்சு செய்து அவை நிரப்பப்பட்டு இந்த வழக்குகள் என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றால் சரியல்ல. அதனால் நான் தாக்கல் செய்துள்ள கடனுறுதி சீட்டிற்கு உரிய பிரதிபலன் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நிரப்பப்படாத கடனுறுதி சீட்டுக்களில் முக்கிய மாறுதல்களை செய்து அதனடிப்படையில்

இவ்வழக்குகளை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே செலவுத்தொகையுடன் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi